**பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு**

**உள்ளூர் கடன் மற்றும் மேம்பாட்டு நிதி**

# வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

நாட்டின் உள்ளூராட்சி நிறுவனங்களில் மூலதன முதலீடு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு தேவையான கடன் வசதிகளை வழங்கல் மற்றும் கடன் வசதிகளை அறவிடும் பிரதான பணியை மேற்கொள்ளும் உள்ளூர் கடன் மற்றும் மேம்பாட்டு நிதி 1916 இன் 22 ஆம் இலக்கம் கொண்ட கட்டளைச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட சட்டரீதியான நிறுவனம் ஒன்றாக இருப்பதோடு இந்த நிதி பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் கீழ் நிர்வகிக்கப்படுகிறது. இந்த நிறுவனத்தின் கீழ் குறிப்பிடப்பட்ட பதவி வெற்றிடங்களுக்காக இலங்கை பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## முகாமைத்துவ உதவியாளர்
## (வெற்றிடங்கள் - 03)

**01. சேவைத் தரம் :** முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் அல்லாதது)

**02. சேவை தரத்திற்கு வழங்கப்படும் பணிகளின் பண்புகள் தொடர்பில் பொதுவான வரையறை**

நிறுவனங்களில் நிறைவேற்று மற்றும் நிர்வாக தரத்தில் ஈடுபட்டிருப்பவர்களின் பணிகளுக்கு உதவுதல் மற்றும்/ அல்லது வசதி வழங்கும் பணிகள் இடையே தொழில்நுட்ப பண்புடையது அல்லாத பணிகள் இந்த சேவை தரத்திற்கு வழங்கப்படும். இந்தத் தரத்தின் பணிகள் இடையே நியமன அதிகாரியினால் குறிப்பிட்டு கூறப்படும் பணிகள் இந்த சேவை தரத்திற்கு சொந்தமான பணியாளர்களினால் மேற்கொள்ளல் வேண்டும்.

**03. தகைமைகள்**

**வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கு**

**கல்வி**

(a) கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) பரீட்சையில்

I. சிங்களம்/ தமிழ்

II. கணிதம்

ஆகிய பாடங்கள் உட்பட நான்கு (04) பாடங்களுக்கு திறமைச் சித்திகளுடன் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.

(b) கல்விப் பொதுத் தராதர (உயர் தர) பரீட்சையில் குறைந்தது மூன்று பாடங்களில் (சாதாரண பொது பரீட்சை தவிர்த்து) சித்தி பெற்றிருத்தல்.

**உள்ளக விண்ணப்பதாரர்கள்**

(a) ஆரம்பத் தரத்தின் - தேர்ச்சி அல்லாத மற்றும் தேர்ச்சி பெற்ற சேவை தரத்தில் கீழுள்ள 'a', 'c' மற்றும் 'd' இல் குறிப்பிடப்பட்ட தகைமைகள் உள்ள பணியாளர்களுக்கு இதற்காக விண்ணப்பிக்க முடியும்.

(b) கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) பரீட்சையில்

I. சிங்களம்/ தமிழ்

II. கணிதம்

ஆகிய பாடங்கள் உட்பட நான்கு (04) பாடங்களுக்கு திறமைச் சித்திகளுடன் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.

(c) சேவையின் நிரந்தர நியமனத்தை பெற்றிருத்தல் வேண்டும் என்பதோடு அந்த நியமனங்கள் நிரந்தமாக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(d) குறித்த திகதிக்கு முன்னர் நிரந்தர நியமனத்திற்கு உட்பட்டவர்களில் 05 ஆண்டுகள் தொடர்ச்சியான, திருப்திகரமான சேவைக் காலம் ஒன்றை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**04. வயதெல்லை**

18 வயதுக்கு குறையாத மற்றும் 45 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது.

**05. சம்பள அளவு**

இந்தப் பதவி முகாமைத்துவச் சேவை பணிப்பாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு நடைமுறைக்கு அமைய அங்கீகரிக்கப்பட்ட பதவி ஒன்றாகும்.

சேவை தரத்திற்கு தொடர்புடைய சம்பள குறியீட்டு இலக்கம் மற்றும் மாதாந்த சம்பள அளவு:

2025.01.01 ஆம் திகதி தொடக்கம்

MA 1-1-2025: ரூபா (46,220 - 10 x 540 - 7 x 630 - 4 x 890 - 20 x 1,190 – 83,390)

(அரசு அங்கீகரித்த கொடுப்பனவுகள் சேரும்)

தலைமை அலுவலகத்தின் சேவைக்காக மத்திரம் ஆட்சேர்ப்பு இடம்பெறுவதால் அருகாமையில் வசிக்கும் விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

ஆட்சேர்ப்பு நேர்முகப் பரீட்சை ஒன்றின் மூலம் மேற்கொள்ளப்படும்.

**சேவை நிபந்தனைகள்**

i. இந்தப் பதவி நிரந்தரமானது என்பதோடு 03 ஆண்டுகள் தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டது.

ii. ஊழியர் சேமலாப நிதியத்திற்கு ஊழியரினால் சம்பளத்தில் 8% செலுத்த வேண்டும் என்பதோடு தொழில் வழங்குநர் 12% மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு 3% வீதமும் செலுத்தப்படும்.

விண்ணப்பங்களை பணிப்பாளர்/ தலைமை நிறைவேற்று அதிகாரி, உள்ளூர் கடன் மற்றும் மேம்பாட்டு நிதி, இலக்கம் 24/ஏ, வோட் பிளேஸ், கொழும்பு - 07 என்ற முகவரிக்கு 2026.02.10 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். விண்ணப்பப் படிவத்தின் மேல் மூலையில் குறித்த பதவியை குறிப்பிடுதல் வேண்டும்.

**தலைவர்,**
**உள்ளூர் கடன் மற்றும் மேம்பாட்டு நிதி**